உ
ஶ்ரீ மஹாகணபதி துணை

விஞ்ஞானம் மெய்ஞானம்
----------------------------------

கணிணிக் கல்வியில் மதிப்பிட அனுப்பிய
தாள்பல செம்மையும் வேண்டியே திருப்பிய
முனைவர் பன்முறை செப்பிய சொல்லில்
மனமும் மிரண்டே அரண்டது தோல்வியில்.

சும்மாயிரு வென்றே பணித்தேன்,
பன்மாதிரி எண்ணம் தணித்தேன்.
அம்மா ! என்னே ஆச்சரியம் !
எந்தன் மனந்தனின் சாதுரியம்.

தணிந்தன எண்ணம் பற்பல,
என்றேயொரு எண்ணம் உதித்திட,
மனப்பரி களைத்தே ஓடிற்று,
உளமோ வருந்தி வாடிற்று.

புண்ணிய நீரை வேளையில் கொடுத்தும்,
மறைசொல் மந்திரம் நூறெட்டாய் ஜபித்தும்,
மனமோ அம்பிகை பாதம் பணியா
திருப்பது முன்செய் பாபப் பிணியா ?

பகவான் ரமணர் எனும் மாமுனியொருவர்
திருவண்ணா மலையார் அடியெ உள்ளார்.
அவர்தம் பாதம் பற்றிடும் யார்க்கும்
மனதினை அடக்கிட வழியும் பிறக்கும்

இவ்வா றறிந்தென் உள்ளம் மிகவும்
உவகை அடைந்தே, அவர்சொற் பலவும்
படித்தேன். மெய்ஞானி செப்பியதாவது நீயார்
என்பதை அறிந்திட கேட்டுப் பார்.

நான் யார் என்றெனையே கேட்டேன்
இதையே அறியேன் என்பதை கண்டேன்
புரிந்தது பாழ்மனம் நான் அன்று,
ஊனும் நானன்று உயிரும் நானன்று.

மனமே பல்லுயிர்க் கருமம் என்பதை
ரமணர் கூறினார். எனவே இருப்பதை,
கருமம் கொடுப்பதை, பெற்று மற்றவை
ஒழித்தே, ஞானத்தீயால் பற்றவை.

வேண்டும் சொல்லற் றிருக்கும் மோன
சத் சித் ஆனந்த நிலை. இதற்கு போன
பிறகெல்லாம் பிரம்மம் மென்றுணர்ந் தோங்கிடவே
அதற்கு முதற்படி எடுத்திட ரமணர் அருள்கவே.

ஶ்ரீ ரமணார்ப்பணமஸ்து

PDF created with pdfFactory trial version www.pdffactory.com